இரு மாதத்திற்கு ஒருமுறை வரும்

# கனவு

செப்டம்பர் 2015

இளையோர் தலைமைத்துவம் வளர்த்தெடுப்பதற்கான செய்தி மடல் 1



தலைமைத்துவ பயிற்சி முடித்த முதலாவது குழு மாணவர்கள் 38 பேர் பயிற்சியாளர்களுடன்




தனிச்சுற்றுக்கு மட்டும்
நன்கொடை ₹10/-

# ஆசிரியர் குழு


**சுந்தர். G.**
செயல் இயக்குநர்
ALC பள்ளி மேம்பாட்டுத் திட்டம்

**D. சைலட் மோனி**
ஆலோசகர்
ALC பள்ளி மேம்பாட்டுத் திட்டம்

**ஜோசப் சகாயராஜ்**
ஆங்கிலம் பயிற்றுவிப்பாளர்
விஷன் குளோபல் எம்பவர்மெண்ட்

**S. டெய்சி டயானா**
மாணவி
டி.எம். பெண்கள் மேல்நிலைப்பள்ளி, சீலோவாம்

**S. அருளரசி**
மாணவி
டி.எம். பெண்கள் மேல்நிலைப்பள்ளி, சீலோவாம்


## பொருளடக்கம்


ஆசிரியர் கடிதம்
பாராட்டு மடல்





தனிச்சுற்றுக்கு மட்டும்


செப்டம்பர் 2015


நன்கொடைகள் வரவேற்கப்படுகின்றன

**தலைமைத்துவம் பயிலும் மாணவ மாணவியர்கள் மற்றும் வழிநடத்துபவர்களின் கட்டுரைகள், கவிதைகள், துணுக்குகள், ஓவியங்கள், அனுபவங்கள், பழமொழிகள், நிகழ்வுகள் வரவேற்கப்படுகின்றன.**

**அனைத்து படைப்புகளும் பெயர், முகவரி, புகைப்படத்துடன் அனுப்பப்பட வேண்டும். படைப்புகள் தங்களுடையதாக இருக்கவேண்டும்.**





என் பேனாவிலிருந்து,




அன்பார்ந்த நண்பர்களே,

தலைமைத்துவத்தைப் பற்றிய முதல் செய்தி மடல் வெளிவருவது குறித்து நான் பெருமையும் மகிழ்ச்சியும் அடைகிறேன். எங்களுடைய விஷன்ஸ் முதன்முதலாக 2008-ம் ஆண்டு இந்தியாவுக்கு வந்ததின் நோக்கம் என்னவென்றால், இன்றை இளைஞர்கள் மத்தியில் பணிபுரிந்து, அவர்களை சமுதாய முன்னேற்றத்திற்கு உழைக்கும் நாளைய தலைவர்களாக உருவாக்குவதே. நாங்கள் கடந்த ஆண்டுகளில் தமிழ்நாடு மற்றும் புதுச்சேரியில் உள்ள பல்வேறு பள்ளிகளில் தலைமைத்துவ பயிற்சிகள் கொடுத்து இருக்கிறோம்.

இப்பொது ஈஸிளீ பள்ளி மேம்பாட்டுத் திட்டத்தின் மூலம், அர்ப்பணிப்புள்ள பணியாளர்கள் வழியாக விஷன்ஸ் தலைமைத்துவ திட்டம் மென்மேலும் வளர்ந்து வருவது குறித்து எங்கள் வாழ்த்துகள் மற்றும் நன்றியை தெரிவித்துக் கொள்கிறோம். இத்திட்டத்தின் மூலம், தங்கள் வாழ்க்கையை அர்த்தமுள்ளதாக்கி வாழ, அனுபவங்களைப் பெருக்கிக் கொள்ள, தங்கள் தனித் திறமைகளை வளர்த்துக் கொள்ள, ஆர்வமாக, துடிதுடிப்பாக இருக்கும் இளைஞர்களை சந்தித்தது குறித்து அளவிலா மகிழ்ச்சி அடைகிறோம்.

இத்தலைமைத்துவ வளர்ச்சி திட்டத்ன் குறிக்கோள் என்னவென்றால், உன்னுடைய திறமைகளுக்கு அளவு இல்லை, உலகத்தின் மீது நீ ஏற்படுத்தக்கூடிய தாக்கத்துக்கு கட்டுப்பாடு இல்லை என்று அனைவரையும் உணர வைப்பதுதான்.

ஜான் குவின்சி ஆதாம் சொல்கிறர்: உன்னுடைய செயல்கள் மற்றவர்களை அதிகமாக கனவு காணத் தூண்டினால், நீ அதிகம் கற்றுக் கொண்டு, அதிகம் சாதித்து படிப்படியாக முன்னேறிச் சென்றால், நீ ஒரு தலைவர்.

இந்நாள் வரைக்கும் 2100-க்கும் மேற்பட்ட தனி நபர்கள், உங்களைப் போல் விஷன்ஸ் தலைமைத்துவ பயிற்சி பெற்று உள்ளார்கள். ஆயிரத்திற்கும் மேற்பட்டவர்கள் ஏ.எல்.சி. பள்ளி மேம்பாட்டுத் திட்டத்தின் மூலம் குழந்தைகள் பாராளுமன்ற திட்டத்தில் பயன் அடைந்துள்ளார்கள். தினமும் உன்னைப் போல் உள்ள இளைய தலைவர்கள், தங்களுடைய திறமைகளை உணர்ந்து, இந்த உலகத்தை நல்லதொரு வாழ்விடமாக மாற்ற முயன்று கொண்டிருக்கிறார்கள்.

எதிர்காலத்தை நோக்கி இருக்கும் நீங்கள் இந்த செய்தி மடல், தலைமைத்துவ பயிற்சியில் உங்களுடைய பங்கேற்பு அனைத்தும் அர்த்தமுள்ளதாக, பயன் உள்ளதாக உங்களுக்கு அமையட்டும். உங்களுடைய கற்றல் அனுபவங்களை பிறருடன் பகிர்ந்து கொள்வோம். உங்கள் படிப்புகளில் கவனம் செலுத்தி, கிடைக்கின்ற எல்லா வாய்ப்புகளையும் பயன்படுத்துங்கள். நம்பமுடியாத அரும்பெரும் செயல்களை நீங்கள் ஒவ்வொருவரும் சாதிப்பதைை ஆவலோடு பார்க்கக் காத்துக் கொண்டிருக்கிறோம்.

உங்கள் வெற்றிப் பாதையில் உங்களில் ஒருவனாகி பயணம் செய்யும்,

அன்புடன்... **கிரேக் பியூ**




## விஷன் குளோபல்
## ஏ.எல்.சி. பள்ளி மேம்பாட்டுத் திட்டம்

# தலைமைத்துவ பயிற்சிகள்

விஷன் குளோபல் நிறுவனமானது திரு. Gerg Buic மற்றும் செல்வி. மீரா பத்மராஜா அவர்களால் அமெரிக்க ஐக்கிய நாட்டில் 2003-ம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டது. அன்று முதல் பொருளாதாரத்தில் பின்தங்கிய நாடுகளில் வாழும் சிறார்களின் தலைமைத்துவ பண்புகளை வளர்த்தெடுப்பதற்காக தன்னை அர்ப்பணித்து செயல்பட்டுக் கொண்டு வருகிறது.



கடந்த 5 ஆண்டுகளாக, ஏ.எல்.சி. பள்ளி மேம்பாட்டுத் திட்டத்துடன் இணைந்து கிராம மாணவ மாணவிருக்கு தலைமைத்துவ பயிற்சிகள் அளித்து வருகின்றது.

முதற்கட்டமாக 38 மாணவ மாணவியர்கள் தலைமைத்துவ பயிற்சிகள் முடித்து சான்றிதழ்கள் பெற்றுள்ளனர். அவர்களுக்கான பட்டமளிப்பு விழா ஜுன் மாதம் 30-ம் தேதி, திருக்கோவிலூர், சீலோவாம் வளாகத்தில் நடைபெற்றது.




இதன் அடுத்த கட்டமாக, பின்வரும் கிராமங்களில் பயிற்சி பெற்ற ஊக்குநர்களைக் கொண்டு தலைமைத்துவ பயிற்சிகள் நடத்தப்பட்டு வருகின்றன. ஒவ்வொரு ஊக்குநரும் 20 நபர்களுக்கு, 20 தலைப்புகளில், 10 மாதங்களுக்கு பயிற்சிகள் வழங்கி வருகின்றனர்.

| திருக்கோவிலூர் மண்டலம் | திருவண்ணாமலை மண்டலம் | | உளுந்தூர்பேட்டை மண்டலம் |
|---|---|---|---|
| 1. கலர்புரம் | 1. வழுதலங்குணம் | 6. சிங்காரப்பேட்டை | 1. S. பாவந்தூர் |
| 2. இளந்துறை | 2. கத்தாலம்பட்டு | 7. கருந்துவம்பாடி | 2. Kl. குந்தம் |
| 3. மேல்வாளை | 3. கொத்தந்தவாடி | 8. மேல் சிறுபாக்கம் | 3. பெரும்பாக்கம் |
| 4. ஆவியூர் | 4. பில்லூர் | 9. பழங்கோவில் | 4. கீழக்கல் பூண்டி |
| 5. காந்திகுப்பம் | 5. கீழ் சிறுபாக்கம் | | 5. V.K. பூண்டி |

# உன்னை அறிந்தால்... உலகை ஆளலாம்



என்னை எனக்குத் தெரியுமா? என்று கேட்டுப்பார். இது என்ன பைத்தியக்கார கேள்வி என்று தோன்றுகிறதா? தன்னையே தெரிந்தவன் தரணி ஆள்வான் என்பது கூற்று. கேலியான கேள்வி என்பதைவிட மிகவும் கஷ்டமான, ஆழமாக, நம்மை ஆராய்ந்து பார்க்கும் கேள்வி இது.

நம்மைப் பற்றி நமக்குத் தெரிந்தது எல்லாம் நம்மைச் சுற்றி இருப்பவர்கள் நம்மைப் பற்றி வைத்திருக்கும் கருத்துக்கள்தான். நம்மை நல்லவர் என்கின்றனர் சிலர். அவன் துரோகம் செய்பவன், குடிகாரன் என்கின்றனர் சிலர். அவனுக்கு குழந்தைபோல் மனது, இருப்பதை எல்லாம் பிறருக்கு கொடுப்பான் என்கின்றனர் சிலர். அவர்கள் கூறுவதில் எதுதான் உண்மை. நான் யார்?

நம்மைப்பற்றி நாமே ஆராய்ந்து அறிந்து பாராட்ட வேண்டிய விஷயங்களை மனதார பாராட்டி, மாற்ற வேண்டிய விஷயங்களை மனவிருப்பத்துடன் மாற்றும்போது நாம் நாமாகிறோம். மாற்றங்கள் சாத்தியமாகிறது.



## உன்னுடைய ஆளுமையை அறிந்துகொள் Personality

நம்முடைய ஆளுமை

- சிந்தனை
- உணர்வுகள்
- நடத்தை

இவைகளின் கட்டமைப்பு ஆகும்.

### நாம் எத்தகைய சிந்தனைப் படைத்தவர்களாக இருக்கிறோம்?

என்னால் முடியாது, நான் தோற்றுப் போவேன், எனக்கு என்னுடைய பெற்றோர் எதுவும் சேர்த்து வைக்கவில்லை, நான் படிக்காதவன், முட்டாள், அவனுக்கு / அவளுக்கு நண்பர்கள் உண்டு, எனக்கு இல்லை, வாழப் பயமாக இருக்கின்றது – போன்ற எதிர்மறைச் சிந்தனை உடையவர்களா நாம்?

அல்லது

என்னால் முடியும், முயற்சி செய்து பார்ப்போம், எனக்கென்று சில திறமைகள உண்டு, தேவையெனில் ஓடிவந்து உதவும் நண்பர்கள் உண்டு. நான் வறுமையில் பிறந்தவன்தான், அனால் வறுமையை மாற்றிவிட முடியும் – போன்ற நேர்மறை சிந்தனை உடையவர்களா நாம்?

அல்லது

கடவுள் தலையில் எழுதியது எழுதியது தான். முன்வினை பயன் இது, என்னுடைய உறவினர்கள் செய்வினை செய்து விட்டார்கள், சாமி சொன்னால் சரிதான் – என்று அறிவியல் பூர்வமாக சிந்திக்காதவர்களா நாம்?

அல்லது

எல்லாவிதமான சிந்தனைகளின் கலவையா? யஸா் நாம் என்பது நாம் எப்படி சிந்திப்பவர் என்பதை பொறுத்த வடிவம் பெறுகின்றது.

**கடந் காலத்தை குறைகூறாது...**

**கடந்து வந்த பாதையிலிருந்து கற்றுக்கொண்டு...**

**எனக்குத் திறமைகள் உண்டு...**

**அபாரமான வாய்ப்புகள் உண்டு...**

**விரும்பியபடி வாழ முடியும்...**

போன்ற தெளிந்த சிந்தனைகளை உனதாக்கிக் கொள்ளுங்கள். காலையில் எழுந்தவுடன் என்னால் முடியும் என்று பிடிப்புடன் கூறுங்கள். எப்போதும் நேர்மறையாகவே சிந்தியுங்கள். மாற்றத்தை உணர்வீர்கள், மாற்றத்தை அனுபவிப்பீர்கள். உங்கள் நட்பு வட்டத்துக்குள் வந்திட பலரும் போட்டிப் போடுவார்கள்.

## நாம் எத்தகைய உணர்வுகளுக்கு சொந்தக்காரர்கள்?

நம்முடன் இருப்பவருக்கு ஒரு பிரச்சனை எனில் ஓடிச் சென்று உதவிட துடிப்பவரா? அல்லது எனக்கும் அதற்கும் தொடர்பில்லை என நினைப்பவரா?

அடுத்தவர்களுக்காக உருகி, உருகி, நொடிந்து போகின்றவர்களா நீங்கள்?

அவன் கீழ் சாதி, அவள் பெண், அவன் படிக்காதவன், அவன் என்னுடன் பழகவே தகுதியில்லாதவன் போன்ற உணர்வுகளின் அடிப்படையில் செயல்படுபவரா நீங்கள்,

எதற்கு எடுத்தாலும், எந்தக் காரணமும் இல்லாமல் கோபத்தில் கொந்தளிப்பவரா நீங்கள்?

பெண்ணை போகப் பொருளாகப் பாவித்து காயப்படுத்துபவரா நீங்கள்?

அவன்/அவள் என்னைக் காயப் படுத்தினான்/ள் தான். அவர்கள் சூழல் அந்த நேரத்தில் அப்படியிருந்தது. ஆனால் நான் கஷ்டப்பட்டபோது எனக்கு பலமுறை உதவியிருக்கின்றார்கள் - என்று நேர்மறை உணர்வு கொள்ளுபவரா நீங்கள்.

உணர்வுகள் நம்மை தாங்கி அழிக்கவும், உணர்வுகள் நம்மை உருவாக்கி உயர்வாக்கவும் ஆற்றல் படைத்தவை.

## எத்தகைய உணர்வுகள் எனக்கு இடைஞ்சலாக உள்ளது?

## எத்தகைய உணர்வுகள் இதமான சூழலை உருவாக்குகின்றது?

என அறிந்து கொள். இதமான சூழலை உருவாக்கும் உணர்வுகளுக்கு முக்கியத்துவம் கொடு. மாற்றம் வரும், ஆளுமை வலுப்படும்.

நாம் எத்தகைய நடத்தை உடையவர்களாக இருக்கின்றோம்?

பிறர் தேடிய உழைப்பில் வாழ்ந்து கொண்டு இருக்கிறோமா?

அடுத்தவர் முயற்சியில் / வளர்ச்சியில் குளிர் காய்கின்றோமா?

திருடினாலும் பரவாயில்லை, வளமாக இருக்க வேண்டும் என நினைக்கின்றோமா?

அடுத்தவன் பொருளை / சொத்தை மனைவியை / கணவனை அபகரித்து அதில் பயனை அனுபவிப்பவர்களா?

உயிரே போனாலும் உண்மை வழியில் தான் நடப்பேன் என்று வாழ்பவரா?

பிறர் வளர்ச்சியைப் பாராட்டி, பிறர் மகிழ்ச்சியில் மனநிறைவுடன் பங்கேற்பவரா?

நம்முடைய நடத்தை நம் ஆளுமையை வடிவமைக்கின்றது.

எனவே நாம் எத்தகைய சிந்தனை, உணர்வு, நடத்தை உடையவர்கள் எனப் புரிந்து, அறிந்து, நேர்மறை சிந்தனையுடன், உணர்வுகளுடன், நடத்தைகளுடன் வாழும் போது நம்முடைய ஆளுமை வலுபெறுகின்றது, பொலிவடைகின்றது.



## உன்னுடைய மதிப்பீடுகளை அறிந்துகொள் Core Values

யாராவது நம்மிடம் உன்னுடைய வாழ்க்கை மதிப்பீடுகள் என்ன என்று கேட்டால் என்ன பதில்கூறுவோம்.

எனக்கும், என்னைச் சார்ந்து இருப்பவர்களுக்கும், நான் வாழும் சமுதாயத்திற்கும் பயன் உள்ளவனா/ளாக, உண்மையுள்ளவனா/ளாக இருப்பேன்.

எந்தச் சூழ்நிலையிலும் கொடுத்த வாக்குறுதிக்கு ஏற்ப வாழ்வேன்.

சாதி, மதம், இனம், மொழி கடந்து என்னுடைய நட்பு வட்டம் விரிவானதாக இருக்கும்.

எந்த விளைவு ஏற்பட்டாலும் ஒருபோதும் முயற்சியை கைவிடமாட்டேன்.

என்னுடைய வாழ்க்கை மாற்றத்திற்கு, மேம்பாட்டிற்கு உதவுபவர்களுக்கு என்றும் நன்றிக் கடன் பட்டிருப்பேன்.

எவ்வளவு கஷ்டப்பட்டாலும், இஷ்டப்பட்டாலும் நேர்மை தவறமாட்டேன்.

எவர் ஒருவரையும் வார்த்தையால், செயலால் காயப்படுத்த மாட்டேன்.

இக்கட்டான சூழ்நிலையிலும், மிகவும் ஆனந்தமான சூழல்களிலும் நிலை தடுமாறமாட்டேன். பொறுமை யுடையவனாக இருப்பேன்.

பிறரின் வளர்ச்சிக்காக, சமுதாயத்திற்காக என்னை அர்ப்பணிப்பேன்.

என்னைத் தவறாக பழித்துரைத்தாலோ, காயப்படுத்தினாலோ பொறுத்துக் கொள்வேன்.

மேற்கூறிய மதிப்பீடுகளில் நம்மிடம் காணப்படும் மதிப்பீடுகள் யஸவை? தெரிந்து கொள்வோம்.

## உன்னுடைய உடலை அறிந்துகொள் **Body fitness**

என்ன கேள்வி இது? என்னுடைய உடலைப் பற்றி எனக்குத் தெரியாதா? அவ்வாறு என்னிடம் தோன்றுகின்றதா? எத்தனை பேருக்கு நம்முடைய உயரம் தெரியும்? நம்முடைய உடல் எடை தெரியுமா? நம்முடைய இரத்தப் பிரிவு தெரியுமா?

என்னால் இதை செய்திட முடியாது என்ற நம்முடைய உடலைக் குறைத்து மதிப்பிடவும் வேண்டாம். முடியும் என்று தேவைக்கு அதிகமாக உடலை வருத்திடவும் வேண்டாம்.

நம்முடைய உடலை எளிய முறையில் அழகுபடுத்தி மகிழ்ச்சி காண்பவரா நாம்?

உடலுக்கு ஆரோக்கியமான உணவு வகைகளை உட்கொள்ளும் பழக்கம் உடையவரா நாம்?

உடல் சுத்தம் பேணுபவரா நாம்?

நம்முடைய உடல் சோர்ந்து இருக்கும் போது, உற்சாகமாக இருக்கும் போது அதைப் புரிந்து கொள்பவரா நாம்?

மதம், சடங்கு, சம்பிரதாயம் என்று நம்முடைய உடலைக் காயப்படுத்துபவரா நாம்?

மேற்கூறிய கேள்விகளுக்கு விடை காணுங்கள். உடல் நாம் வாழும் கூடு, கூடின்றி வாழ்வில்லை, நாமில்லை. மறக்க வேண்டாம்.

## உன்னுடைய கனவுகளை அறிந்துகொள் **Dreams**

இளைஞர்களே கனவு காணுங்கள் என்றார் மறைந்த டாக்டர் அப்துல் கலாம் அவர்கள்.

நம்முடைய கனவுகள் முக்கியமானவை. வாழ்வின் போக்கை மாற்றும் சக்தி படைத்தவை. கனவுகளை நம்பு. வாழ்ந்திடப் பார்.

பைலட்டாக மாற கனவு காண்கின்றாயா? நல்லது. அதற்கு என்ன படிக்க வேண்டும், எங்கு படிக்க வேண்டும் – என்று கனவு காண்.

அழகான அன்பான குடும்பம் வேண்டுமா? வாழ்ந்திட பணம் வேண்டுமா? கனவு காண். அதை நோக்கி நடந்திடு.

உன்னுடைய கனவுகள் வாழ்வுக்கு வளம் சேர்ப்பவையா? அல்லது வாழ்க்கையை அழிவுக்கு கொண்டு செல்பவையா? புரிந்து கொள். கனவு காண். கனவினை நனவாக்கிட விடா முயற்சியுடன் செயல்படு.

## உனக்குப் பிடிக்கும் / பிடிக்காத காரியங்களை அறிந்து கொள் **Like/Unlike things**

இது கூடவா எனக்குத் தெரியாது என்று தோன்றுகின்றதா?

| **எனக்குப் பிடித்த விஷயங்கள்** | **எனக்குப் பிடிக்காத விஷயங்கள்** |
|---|---|
| • படிப்பில்<br>• உறவுகளில்<br>• உணவு வகைகளில்<br>• நண்பர்களிடம் | • ஆடை, அணிகலன்களில்<br>• தொழிலில்<br>• மத நம்பிக்கையில் |

இவைகளை அட்டவணைப் படுத்து.

உனக்குப் பிடித்தவைகளை இன்னும் அதிகமாக அனுபவித்திட முயற்சி செய். உனக்குப் பிடிக்காதவைகள் பிறரை காயப்படுத்தாமல் இருக்கட்டும். உனக்குப் பிடிக்காதவைகளை ஒதுக்கி விட்டு வாழ்ந்திடு.

**உன்னை அறிவது ஓர் முயற்சி.**
**தீவிரமாக, தெளிவாக, அறிவியல் பூர்வமாக....**
**முயற்சி செய்தால் நாம் ஒவ்வொருவரும்**
**நம்மை அறிந்து கொள்ளலாம்.**

**வாழ்க்கை வசப்படும்...**
**வாழ்வது இன்பமானதாக அமையும்...**

எஸ். அருளரசி, XII-A

# நான் கற்றுக்கொண்டவை

## தலைமைத்துவ பயிற்சியின் மூலம்

நான் விடுதியில் 1-ம் வகுப்பு முதல் படித்து வருகிறேன். நான் 9-ம் வகுப்பு படிக்கும் போதிலிருந்து தலைமைத்துவப் பயிற்சியில் கலந்து கொண்டேன். இப்போது 12-ம் வகுப்பு படித்து வருகின்றேன். இப்பயிற்சியில் தலைமைத்துவம் என்ன என்பதை அறிந்து கொண்டேன். தலைவர் என்றால் யஸர்? எப்படி இருக்க வேண்டும் என்பதைப் பற்றியும் தெளிவாகக் கற்றுக்கொண்டேன். ஒரு சராசரி மனிதனைப் போல் அல்லாமல், தலைவர்கள் தன்னுடன் உள்ள மக்களை எப்படி சரியான பாதையில் வழிநடத்திக் கொண்டு செல்ல வேண்டியதைப் பற்றியும் அவர்களின் குறைகளை நிவர்த்தி செய்ய வேண்டியதைப் பற்றியும், இதற்கு எடுத்துக்காட்டாக பல்வேறு தலைவர்களின் வாழ்வியல் செயல்முறைகளையும் கற்றுக் கொண்டேன்.

பிறந்தோம், வாழ்ந்தோம் என்று இந்த உலகத்திற்கு பாராமாக இல்லாமல், ஏதோ ஒன்று இந்தச் சமுதாயத்திற்கு செய்யவேண்டும் என்கிற உந்துதலை இந்தத் தலைமைத்துவப் பயிற்சி என்னுள் ஏற்படுத்தியது. நான் சிறந்த தலைவியாக மாற என் வாழ்க்கை செயல்முறைகளை மாற்றிக் கொண்டேன்.

**நான் +2 முடித்த பின்பு இன்ஜினியரிங் படிக்க விரும்புகிறேன். அதற்காக அதிக மதிப்பெண்களை எடுப்பேன். நான் கல்லூரிக்கு சென்றாலும் அங்கு என் தலைமைத்துவத் வளர்த்துக் கொள்வேன். மேலும் தலைமைத்துவ பண்புகளை என் வாழ்க்கையில் பயன்படுத்துவேன்.**

நேரத்தை எப்படி கடைபிடிப்பது என்றும், இயற்கை வளங்களைப் எப்படிப் பாதுகாப்பது, மேம்படுத்துவது என்றும் கற்றுக்கொண்டேன். நான் இந்த வயது முதல் என் வாழ்நாள் முழுவதும் சிறந்த தலைவியாக இருக்க முடிவு செய்துள்ளேன். இப்பொழுது மட்டுமல்லாமல் இனி வரப்போகிற நாட்களை தைரியத்துடன் எதிர்கொள்ள கற்றுக் கொண்டுள்ளேன். வருங்காலத்தை என்னால் மாற்ற இயலும் என்பதை உணர்கிறேன். நான் தைரியத்துடனும், தன்னம்பிக்கையுடனும் இருக்க கற்றுக் கொடுத்தது இந்த தலைமைத்துவப் பயிற்சிதான்.

*பிறர் எப்படி மாறவேண்டும் என்று*
*நினைக்கிறாயோ?*
*அதன்படி முதலில் நீ மாறு?*
*சிறந்த தலைவனாய்!*

**Leadership is the most powerful weapon.**
**We can use it to change the World.**

## நீ நினைத்தால் விண்மீனையும் விழுங்கிவிட முடியும்



துருப்பிடித்துத் தேய்வதைவிட உழைத்துத் தேய்வதே நல்லது. நீ நினைத்தால் விண்மீனையும் விழுங்கிவிட முடியும். இதுவே உன் உண்மை பலம். மூட நம்பிக்கைகளை உதறித் தள்ளிவிட்டுத் தைரியமாக செயல்படு.

கடுமையான உழைப்பின்றி மகத்தான காரியங்களைச் சாதிக்க முடியாது. பயந்து பயந்து புழுவைப் போல் மடிவதைவிட கடமை என்னும் களத்திலே போரிட்டு உயிர் துறப்பது மேலானது.

எதுவும் செய்யாமல் இருப்பதைவிட ஏதாவது செய்வதே நல்லது. அதில் தவறு நேர்ந்தாலும் பாதகம் இல்லை.

எதிர்காலத்தில் என்ன நேருமோ என்று கணக்குப் பார்த்துக்கொண்டே இருப்பவனால் எதையும் சாதிக்க முடியாது. முயன்று செயல்களை செய்பவனே வாழ்க்கையில் வெற்றி பெறுவான்.

## தலைவர்களை அறிந்து கொள்வோம்

# ஈ.வெ. ராமசாமி



**பெரியார்** என்று அனைவராலும் அழைக்கப்படும் ஈ.வெ. ராமசாமி அவர்கள், எழுச்சியூட்டும் அரசியல்வாதியாக மட்டுமல்லாமல் சமூக சீர்திருத்தத்திற்காகவும், மூடநம்பிக்கைகளை மக்களிடமிருந்து களைவதற்காகவும், சாதி வேற்றுமைகளை அகற்றுவதற்காகவும் போராடிய மிகப்பெரிய பகுத்தறிவாளர். தமிழகத்தின் மிகப்பெரிய கழகமான திராவிடர் கழகத்தைத் தோற்றுவித்தவர். பெண் விடுதலைக்காகவும், சாதி மற்றும் பாலின சமத்துவம் போன்ற கொள்கைகளுக்காகவும், திராவிடர்கள் பார்ப்பனரல்லாதார் என்ற காரணத்தால் புறக்கணிக்கப்படுவதையும் எதிர்த்துப் போராடிய சமூக சீர்திருத்தத்தின் தந்தை. தென்னிந்தியாவின் சாக்ரடீஸ் என்றும், இந்தியாவின் கண்ணிராத பகுத்தறிவு சிற்பி என்றும் போற்றப்பட்ட ஈ.வே. ராமசாமி அவர்களின் வாழ்க்கை வரலாறு மற்றும் சாதனைகளை இங்கு விரிவாகக் காண்போம்.

பிறப்பு : செப்டம்பர் 17, 1879

இடம் : ஈரோடு, தமிழ்நாடு (இந்தியா)

பணி : அரசியல்வாதி, சமூக சேவகர்

நாட்டுரிமை : இந்தியா

இறப்பு : டிசம்பர் 24, 1973

### பிறப்பு:

ஈ.வே. ராமசாமி அவர்கள், 1879-ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 17-ம் நாள் வெங்கட்ட நாயக்கருக்கும், சின்னத்தாயம்மைக்கும் மகனாக இந்தியாவின், தமிழ்நாடு மாநிலத்திலுள்ள ஈரோடு மவாட்டத்தில் பிறந்தார். இவருடைய இயற்பெயர் - ஈரோடு வெங்கட்ட இராமசாமி நாயக்கர். இவருக்கு கிருஷ்ணசாமி என்ற சகோதரனும், கண்ணம்மா மற்றும் பொன்னுதாயி என்ற சகோதரிகளும் இருந்தனர். இவருடைய குடும்பம் வசதியான வணிக பின்னணியைக் கொண்டதாக இருந்தது.

### ஆரம்ப வாழ்க்கை:

தனது படிப்பை ஐந்தாம் வகுப்பு வரை முடித்துக் கொண்ட ஈ.வெ.ரா. அதன்பின் கல்வி பயில விருப்பம் இல்லாததால் தன்னுடைய 12வது வயதில் தந்தையின் வணிகத்தில் தன்னை ஈடுபடுத்திக் கொண்டார். தன்னுடைய இளம் வயதிலேயே, தனது பகுத்தறிவு சிந்தனையால், திராவிடத்தை சதியால் அடக்கியாண்ட ஆரியத்தை பல கேள்விகள் கேட்கத் தொடங்கினார். அவருடைய 19-வது வயதில், 13 வயது நிரம்பிய நாகம்மையாரை மணந்து கொண்டார். திருமணத்திற்குப் பிறகு நாகம்மையார் தன்னுடைய கணவரின் புரட்சிக்கு முழுவதுமாக தன்னை அர்ப்பணித்துக் கொண்டார். திருமணமான இரண்டு ஆண்டுகளில் ஒரு பெண் குழந்தை பிறந்தது. ஆனால், அந்த குழந்தை ஐந்து மாதத்திலேயே இறந்து விட்டது. 1902-ம் ஆண்டுகளில் கலப்புத் திருமணங்களை நடத்தி வைத்தார். அனைத்து சமய, சாதியினருடன் சேர்ந்து விருந்துண்டார். இதனால் இவருக்கும், இவருடைய தந்தைக்கும் மனக்கசப்பு ஏற்பட்டது. பின்னர் இவருடைய பகுத்தறிவு செயல்களை ஏற்கமுடியாத தந்தையின் கண்டனத்தால் துறவு பூண்டு காசிக்கு சென்றார்.

### காசிக்குப் பயணம்:

காசியில் அவருக்கு நடந்த நிகழ்வு அவரின் புரட்சிகர சிந்தனைக்கு வித்திட்டது. பெரியாருக்கும் அவரது தந்தைக்கும் ஏற்பட்ட மனக்கசப்பால் காசிக்கு சென்ற அவருக்கு, அங்கு பிராமணரல்லாதார்

வழங்கும் நிதியில் நடத்தப்படும் அன்ன சத்திரத்தில் உணவு மறுக்கப்பட்டு வீதியில் தள்ளப்பட்டார். இந்த நிலைமையை எண்ணி மிகவும் வருந்தினார். பின்னர் குப்பைத் தொட்டியில் விழும் எச்சில் இலைகளின் உணவை உண்டு பசியாறினார். அது மட்டுமல்லாமல், காசியில் வேசிகளின் வேசமும், திராவிடர்கள் பிச்சைக் காரர்களாக இருப்பதையும் மற்றும் புனித கங்கையில் பிணங்கள் மிதப்பதையும் கண்ட அவர் அன்றிலிருந்து கடவுள் மறுப்பாளராக (ஒரு நாத்திகவாதியாக) தன்னை மாற்றிக்கொண்டார்.

**சுயமரியாதை இயக்கம்:**

1925-ம் ஆண்டு பெரியாரால் சுயமரியாதை இயக்கம் தோற்றுவிக்கப்பட்டது. இந்த இயக்கத்தின் முக்கிய கொள்கையே மூடப்பழக்க வழக்கங்களை சமூகத்தில், மக்களிடமிருந்து அகற்றுவதை நோக்கமாக கொண்டு செயல்பட்டது. தீண்டாமை, மூடநம்பிக்கை, வர்ணாஸ்ரம தர்மம் கடைபிடிக்கும் பார்ப்பனியம், பெண்களை தாழ்வாகக் கருதும் மனநிலை போன்றவற்றை எதிர்த்து குரல் கொடுத்தார். தென்னிந்தியாவில் பழம்பெருமை வாய்ந்த திராவிடர்கள், பார்ப்பனரல்லாதார் என்ற காரணத்தால் புறக்கணிக்கப்படுவதையும், அவர்களால் திராவிடர் வாழ்வு சுரண்டப் படுவதையும் பெரியார் எதிர்த்தார். கைம்பெண் மறுமணம் போன்ற புரட்சி திருமணங்களை நடத்திக் காட்டியது மட்டுமல்லாமல், கலப்புத் திருமண முறையையும் இவ்வியக்கம் ஆதரித்தது.

கோயில்களில் சட்டத்திற்குப் புறம்பாக பின்பற்றப்படும் தேவதாசி முறையையும், குழந்தைகள் திருமணத்தையும் தடைசெய்தது. அரசு நிர்வாகப் பணி மற்றும் கல்வி ஆகியவற்றில் இடஒதுக்கீடு முறையைக் கடைபிடிக்க இவ்வியக்கம் வலியுறுத்தியது. பின்னர் தன்னுடைய கொள்கைகளையும் சிந்தனைகளையும் பரப்புவதற்கு குடியரசு நாளிதழை 1925-ம் ஆண்டு தொடங்கினார். சுயமரியாதை இயக்கம், வெகுவேகமாக வளர்ந்தது மட்டுமல்லாமல், மக்களின் ஆதரவையும் பெற்றது. சுயமரியாதையாளர்கள் ஈரோடு மற்றும் பிற மாவட்டங்களிலும், மாநாடுகளும், கூட்டங்களும் நடத்தப்பட்டு மக்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்தினார். 1929 முதல் 1932 வரை மலேசியா, ரஷ்யா, ஐரோப்பா, பிரான்ஸ், ஜெர்மனி, கிரீஸ், சிங்கப்பூர், இலங்கை மற்றும் பல வெளிநாடுகளுக்குப் பயணம் மேற்கொண்டு தன்னுடைய சுயமரியாதைக் கொள்கைகளை விளக்கிக் கூறினார்.

**புனைப் பெயர்கள்:**

இவருடைய சமுதாய பங்களிப்பை பாராட்டி யுனெஸ்கோ நிறுவனம் ஜுன் 27, 1973 அன்று பெரியாரை புத்துலக தொலைநோக்காளர், தென்னிந்தியாவின் சாக்ரடீஸ், சமூக சீர்திருத்த இயக்கத்தின் தந்தை என பாராட்டி விருது வழங்கியது. அறியஸமை, மூடநம்பிக்கை, அர்த்தமற்ற சம்பிரதாயங்கள், மட்டமான பழக்க வழக்கங்கள் ஆகியவற்றின் கடும் எதிரி, பகுத்தறிவுப் பகலவன், வைக்கம் வீரர் மற்றும் தந்தை பெரியார் என பல்வேறு பெயர்களில் அழைக்கப்படுகிறார் இவர்.

**இறப்பு:**

பகுத்தறிவின் சிற்பு, அறிவு பூட்டின் திறவுகோல், எதையும் ஏன்? எதற்கு? எப்படி? என்று கேட்ட வைத்தவர். மூட நம்பிக்கையை ஒழித்துத் தன்னம்பிக்கையை விதைத்தவர், உலகின் மாபெரும் சுய சிந்தனையாரும், அழியாத வரலாற்றின் அறிஞருமான தந்தை பெரியார், 1973-ம் ஆண்டு டிசம்பர் 24-ம் நாள் தனது 94-வது வயதில் காலமானார்.

பலநூற்றாண்டு கால வரலாற்றை வெறும் இருபது வருடங்களில் மாற்றிக் காட்டிய வரலாற்றுத் தேடல், மனித குல வரலாற்றில் தன் மக்களின் விடியலுக்காகப் போராடிய மாபெரும் வீரர், இந்திய விடுதலையில் பங்காற்றி, தமிழ்நாடு காங்கிரஸ் தலைவராக இருந்து, மதுவிலக்குக் கொள்கைகளை காந்திக்கு எடுத்துரைத்து, சுயமரியாதை இயக்கம் கட்டமைத்து, சீர்திருத்த திருமணம் என்ற ஒரு புதிய வாழ்க்கை ஒப்பந்த முறையை சட்டமாக்கி, தன் தமிழினம் தலைநிமிர்ந்து வாழ வகைசெய்த பகுத்தறிவு பகலவன், திராவிடம் என்கிற பல நூற்றாண்டு கால வரலாற்றின் வெற்றி நாயகன் என இன்னும் சொல்லிக்கொண்டே போகக்கூடிய அரும்பணியை ஆற்றிய மாபெரும் சிந்தனையாளர் பெரியார் ஈ.வெ.ரா. என்றால் அது மிகையாகாது.

எம். புவனா, XII



# எங்களால் முடிந்தது

என் பெயர் எம். புவனா. நான் இந்த வருடம் டி.எம். பெண்கள் விடுதி மேல்நிலைப் பள்ளியில் 12-ம் வகுப்பு படிக்கிறேன். நான் இந்த தலைமைத்துவப் பயிற்சியில் 9-ம் வகுப்பிலிருந்து பங்கு பெற்று வருகிறேன். இந்த தலைமைத்துவப் பயிற்சி என்னை முதலில் நல்ல மனிதனாக மாற்றியது.

நான் 10-ம் வகுப்பு படிக்கும்போது என்னுடன் தலைமைத்துவப் பயிற்சி பெற்ற 6 பேருடன் இணைந்து அற்புதமான செயல் ஒன்றைச் செய்தோம். அது என்னவெனில், எங்கள் விடுதியிலேயே சிறு தொகையை சேமித்து, அதனை தொழுநோயாளிகளுக்குப் பயனுள்ள வகையில் அமைத்துத் தரவேண்டும் என்று எண்ணினோம்.

அதன்படியே, நாங்கள் 7 பேரும் குழுவாய் சேர்ந்த எங்கள் விடுதியில் உள்ள குப்பைகளை மட்கும் குப்பை, மட்காத குப்பை எனப் பிரித்து அதனை அப்புறப்படுத்தினோம்.

அதில் பயனற்ற காகிதங்களை மட்டும் சேகரித்து, அதனை கடையில் கொடுத்து சிறு தொகையை முதலில் சேகரித்தோம். அந்த சிறு தொகையில் இருந்து நாங்கள் திண்பண்டங்கள் வாங்கி எங்கள் விடுதியிலேயே விற்பனை செய்தோம். முதலில் சேகரித்த தொகை 10 ரூபாய். அதனை நாங்கள் 5,000 ரூபாயாக மாற்றினோம்.

இந்தச் செயலை நாங்கள் செய்யும்போது எங்களுக்கு அநேக பிரச்சனைகள் தடைகளாக வந்தது. ஆனால், நாங்கள் அந்த செயலை செய்து முடிக்க வேண்டும் என்ற இலக்கோடு சிறிய தொகையைச் சேகரித்தோம். அந்த தொகையை நாங்கள் 7 பேரும் சேர்ந்து வடதொரசலூரில் உள்ள தொழுநோயாளிகள் மருத்துவமனைக்குக் கொடுத்தோம். அந்த தொகை அவர்களின் மருந்து வாங்குவதற்கு உதவும் என்று அந்த மருத்துவமனையின் தலைமை மருத்துவர் தெரிவித்தார்.

நாங்கள் அந்த நோயாளிகளிடம் சென்று அவர்களைப் பார்த்து அவர்களிடம் பேசினோம். இந்த செயலை நாங்கள் செய்ததற்கு காரணம் என்னவெனில் முதலாவது எங்களுக்கு அளிக்கப்பட்ட தலைமைத்துவ பயிற்சியே ஆகும். எங்களை சிறந்த வழிகாட்டியாக மாற்றியதும் இதுவே.

அதாவது, **நான் என்னுள் இருக்கும் தாலந்துகளையும், திறமைகளையும் வெளிப்படுத்த இது மிகவும் உறுதுணையாக இருந்தது. நான் என்னுடைய எதிர்காலத்தில் ஒரு நல்ல தலைவராக செயல்படுவேன் என்று உறுதியளிக்கிறேன். இப்பொழுதும் தலைவியாகச் செயல்பட்டுக் கொண்டு இருக்கிறேன்.**

## ஆபிரகாம் லிங்கன்



முதன்முதலாக தேர்தலைச் சந்தித்து தோல்வியடைந்த நேரத்தில், பிரார்த்தனை கூட்டம் ஒன்றில் கலந்துகொணடார் ஆபிரகாம் லிங்கன். கூட்டம் முடிந்ததும் உங்களில் சொர்க்கத்துக்குச் செல்ல விரும்புகிறவர்கள் மட்டும் கையை உயர்த்துங்கள் என்றார் பாதிரியார். எல்லோரும் கையை தூக்க, ஆபிரகாம் லிங்கன் மட்டும் பேசாமல் நின்றார். ஆபிரகாம்! நீ எங்கே போவதாக உத்தேசம்? என பாதிரியார் கேட்க, தோல்வி அடைந்திருந்த அந்த மனநிலையிலும், நான் செனட் உறுப்பினராகப் போகிறேன் என்று உறுதியான குரலில் சொன்னார் ஆபிரகாம். **நீ எதுவாக மாற விரும்புகிறாயோ, அதுவாகவே மாறுவாய்** என புன்னகையுடன் ஆசி வழங்கினார் பாதிரியார்.


## தலைவர்களை அறிந்து கொள்

# தலைவனாகு போட்டி


மாபெரும் பரிசு வெல்லுங்கள்

புகைப்படத்திலுள்ள தலைவர்களின் பெயர், பிறந்த ஊர், பிறந்த தேதி, அவர்கள் தன்னுடைய வாழ்நாளில் சாதித்த சாதனைகளில் உன்னைக் கவர்ந்த 3 விஷயங்கள், அதற்கான காரணங்கள் இவைகளை எழுதி கனவு பத்திரிக்கையின் ஆசிரியருக்கு செப்டம்பர் 25ம் தேதிக்குள் கிடைக்கும்படி, தங்களின் முழு முகவரி மற்றும் பாஸ்போர்ட் அளவு புகைப்படத்துடன் அனுப்புங்கள்.

**முதல் 3 நபர்களின் எதார்த்தமான கருத்துகள் அடுத்த இதழில் பிரசுரிக்கப்படும்**


| | பெயர், பிறந்த ஊர், பிறந்த தேதி | சாதித்த மூன்று விஷயங்கள் | உன்னைக் கவர்ந்ததற்கான காரணங்கள் |
|---|---|---|---|
|  | | | |
|  | | | |
|  | | | |


















ஐ. சூர்யா

# இலக்கை அடைய...



நம்பிக்கை என்னும் விதை எடுத்து
தைரியம் என்னும் மண்ணில் புதைத்து
விடா முயற்சி என்னும் உரம்போட்டு
வழிநடத்துதல் என்னும் தண்ணீர் ஊற்றி
தலைமைத்துவம் என்னும் செடியை வளர்த்து
தலைவன் என்ற பூவைப் பெற்றேன்.

நீ சிறந்த தலைவனாக வேண்டுமென்றால் முதலில்
நீ சிறந்த தொண்டனாக இருக்கவேண்டும்
தாய் என்பவர் அன்புள்ளவள்
தந்தை என்பவர் பாசமுள்ளவர்
குரு என்பவர் கற்பிப்பவர்
ஆனால், தலைவன் என்பவன்
இவை அனைத்தையும் செய்பவன்.

இலக்கைத் தொட நினைப்பது வேறு!
இலக்கை அடைய நினைப்பது வேறு!

அதனால், **இலக்கை அடைய முயற்சி செய்!**
**தொட அல்ல!**



# அ.ப.ஜெ. அப்துல் கலாம்

## A.P.J.ABDULKALAM

இந்தியாவின் தலைசிறந்த விஞ்ஞானி, தொழில்நுட்ப வல்லுநர், மிகப்பெரிய பொருளாளர், இந்தியாவின் 11–வது குடியரசுத் தலைவர், இந்திய ஏவுகணை நாயகன், இந்திய விஞ்ஞான வளர்ச்சியின் தந்தை, சிறந்த ஆசிரியர் மற்றும் அனைவராலும் மதிக்கத்தக்க அற்புதமான பேச்சாளர், வருங்கால இளைஞர்களின் முன்மாதிரியாகக் கருதப்படும் நம் எல்லோருக்கும் தெரிந்த ஏ.பி.ஜே. அப்துல் கலாமின் வாழ்க்கை வரலாற்றைப் பற்றி தெரிந்து கொள்வோம் வாருங்கள்.

**பிறப்பு :** *அக்டோபர் 15, 1931*

**இடம் :** இராமேஸ்வரம் (தமிழ்நாடு)

*1931-ம் ஆண்டு அக்டோபர் மாதம் 15-ம் நாள் ஜைனுலாப்தீனுக்கும், ஆஷியம்மாவுக்கும் மகனாக இந்தியாவின் தமிழ்நாடு மாநிலத்தில், இராமநாதபுரம் மாவட்டத்திலுள்ள, பாம்பன் தீவில் ஒரு சிறிய நகராட்சியான இராமேஸ்வரத்தில் பிறந்தார். இவர் ஒரு இஸ்லாமிய குடும்பத்தைச் சேர்ந்தவர்.*

**இளமைப் பருவம் :** அப்துல் கலாம், இராமேஸ்வரத்திலுள்ள தொடக்கப்பள்ளியில் தனது படிப்பை தொடங்கினார். ஆனால் இவருடைய குடும்பம் ஏழ்மையில் இருந்ததால், இளம் வயதிலே இவர் தன்னுடைய குடும்பத்திற்காக வேலைக்குச் சென்றார். பள்ளி நேரம் போக மற்ற நேரங்களில் இவர் செய்தித்தாள்கள் விநியோகம் செய்தார். இவருடையை பள்ளிப் பருவத்தில் இவர் ஒரு சராசரி மாணவனாகவே வளர்ந்தார்.

**கல்லூரி வாழ்க்கை :** தன்னுடைய பள்ளிப் படிப்பை முடித்தபிறகு, திருச்சிராப்பள்ளியிலுள்ள செயின்ட் ஜோசப் கல்லூரியில் இயற்பியல் பயின்றார். 1954-ம் ஆண்டு இயற்பியலில் இளங்கலைப் பட்டம் பெற்றார். ஆனால் இயற்பியில் துறையில் ஆர்வம் இல்லை என்று உணர்ந்த இவர், 1955-ம் ஆண்டு தன்னுடைய விண்வெளி பொறியியல் படிப்பை சென்னையிலுள்ள எம்.ஐ.டி.யில் தொடங்கினார். பின்னர் அதே கல்லூரியில் முதுகலைப் பட்டமும் பெற்றார்.

**விஞ்ஞானியாக ஏ.பி.ஜே. அப்துல் கலாம் :** *1960-ம் ஆண்டு வானூர்தி அபிவிருத்தி (DRDO) பிரிவில் விஞ்ஞானியாக தன்னுடைய ஆராய்ச்சி வாழ்க்கையைத் தொடங்கிய அப்துல் கலாம், ஒரு சிறிய ஹெலிகாப்டரை இந்திய ராணுவத்திற்காக வடிவமைத்துக் கொடுத்தார். பின்னர், இந்திய விண்வெளி ஆராய்ச்சிக் கூடத்தில் (ISRO) தனது ஆராய்ச்சிப் பணிகளை தொடர்ந்த அவர், துணைக்கோள் ஏவுகணைக் குழுவில் (SLV) செயற்கைக் கோள் ஏவுதலில் முக்கிய பங்காற்றினார். 1980-ம் ஆண்டு ராக்கெட்டைப் பயன்படுத்தி SLV-III ரோகினி-1 என்ற துணைக்கோளை வெற்றிகரமாக விண்ணில் ஏவச்செய்தார். இது அவருக்கு மட்டுமல்லாமல், இந்தியாவிற்கே ஒரு சாதனையாக அமைந்தது. இத்தகைய வியக்கத்தக்க செயலைப் பாராடடி மத்திய அரசு இவருக்கு 1981-ம் ஆண்டு இந்தியாவின் மிகப்பெரிய விருதான பத்ம பூஷன் விருது வழங்கி கௌரவித்தது. 1963-ம் ஆண்டு முதல் 1983-ஆம் ஆண்டு வரை, இந்திய விண்வெளி ஆராய்ச்சிக் கூடத்தில் பல பணிகளை சிறப்பாக செய்த இவர், 1999-ம் ஆண்டு பொக்ரான் அணு*

ஆயுத சோதனையில் முக்கிய பங்காற்றியுள்ளார். இந்தியாவை அணு ஆயுத வல்லரசாக மாற்றிய ஏ.பி.ஜே. அப்துல் கலாம், இதுவரை ஐந்து ஏவுகணைத் திட்டங்களில் பணிபுரிந்துள்ளார். அவர், அனைவராலும் இந்திய ராணுவ ராக்கெட் படைப்பின் பிதாவாக போற்றப்படுகிறார்.

**குடியரசுத் தலைவராக ஏ.பி.ஜே. அப்துல் கலாம் :** *2002-ம் ஆண்டு நடந்த குடியரசுத் தலைவர் தேர்தலில் வெற்றி பெற்று, இந்தியாவின்11-வது குடியரசுத் தலைவராக ஜூலை 25-ம் நாள் 2002-ல் பதவியேற்றார். குடியரசு தலைவராவதற்கு முன், இந்தியாவின் மிகப்பெரிய விருதான பாரத ரத்னா விருது மத்திய அரசு இவருக்கு வழங்கி கௌரவித்தது. மேலும், பாரத ரத்னா விருது பெற்ற மூன்றாவது குடியரசுத் தலைவராக இருந்த இவர் மக்களின் ஜனாதிபதி என்று அனைவராலும் அன்போடு அழைக்கப்பட்டார். 2007-ம் ஆண்டு குடியரசுத் தேர்தலில் மீண்டு போட்டியிட வாய்ப்பு இருந்தபோதும், பிறகு பல காரணங்களால் அந்த தேர்தலில் போட்டியிடப் போவதில்லை என முடிவு செய்து விலகினார்.*

**விருதுகள் :** *1981 - பத்மபூஷன், 1990 - பத்ம விபூஷன், 1997 - பாரத ரத்னா, 1997 - தேசிய ஒருங்கிணைப்பு இந்திரா காந்தி விருது, 1998 - வீர சவர்கார் விருது, 2000 - ராமானுஜன் விருது, 2007 - அறிவியல் கவுரவ டாக்டர் பட்டம், 2007 - கிங் சார்லஸ்-2 பட்டம், 2008 - பொறியியல் டாக்டர் பட்டம், 2009 - சர்வதேச வோன் கார்மான் விங்ஸ் விருது, 2009 - ஹூவர் மெடல், 2010 - பொறியியல் டாக்டர் பட்டம், 2012 - சட்டங்களின் டாக்டர், 2012 - சவரா சம்ஸ்க்ருதி புரஸ்கார் விருது.*

**ஏ.பி.ஜே. அப்துல் கலாம் எழுதிய நூல்கள் :** *அக்னி சிறகுகள், இந்தியா 2012, எழுச்சி தீபங்கள், அப்புறம்பிறந்தது ஒரு புதிய குழந்தை.*

*இறுதி வரைக்கும் பிரம்மச்சாரியாகவே வாழ்ந்த ஏ.பி.ஜே. அப்துல் கலாமின் எளிமையான வாழ்க்கையும், அவரது இனிமையான பேச்சும் எல்லோரையும் கவர்ந்தது என்றால் வியப்பில்லை. எதிர்கால இந்தியா இளைஞர்கள் கையில் என்ற அவர் கனவு காணுங்கள்! அந்தக் கனவை நினைவாக்கப் பாடுபடுங்கள் என்னும் வாக்கியத்தை இளைஞர்களின் மனதில் வேரூன்றச் செய்தவர்.*

*உலகம் போற்றும் விஞ்ஞானியான கலாம் தன்னுடைய பொன்மொழிகளாலும், கவிதைகளாலும், வாசகங்களாலும் அனைவரின் மனதிலும் நீங்க இடம் பிடித்துள்ளார்.*

## உற்சாகமூட்டும் சில பழமொழிகள்

- அச்சமில்லாதவன் அம்பலம் ஏறுவான்
- இளமையில் சோம்பல் முதுமையில் வறுத்தம்
- இறைக்க ஊறும் மணற்கேணி, ஈயப் பெருகும் பெருஞ்செல்வம்.
- உழுகிற நாளில் ஊருக்குப் போனால் அறுக்கிற நாளில் ஆள் தேவையில்லை.
- ஏருழுகிறவன் இளப்பமானால் எருது மச்சான் முறை கொண்டாடும்
- ஒரு காசு பேணின் இரு காசு தேறும்.
- கடுகத்தனை நெருப்பானலும் போரைக் கொளுத்தி விடும்.
- கடுகு சிறுத்தாலும் காரம் போகுமா?
- கருமத்தை முடிக்கிறவன் கட்டத்தைப் பாரான்.
- கள் விற்று கலப்பணம் சம்பாதிப்பதைவிட கற்பூரம் விற்று காற்பணம் சம்பாதிப்பது மேல்.
- கற்கையில் கல்வி கசப்பு, கற்றபின் அதுவே இனிப்பு.
- காய்த்த மரம்தான் கல் அடிபடும்.
- காரியமாகும் வரையில் கழுதையையும் காலைப்பிடி.
- காற்றுள்ளபோதே தூற்றிக்கொள்.
- குந்தி இருந்து தின்றால் குன்றும் மாளும்.
- செய்வன திருந்தச் செய்.
- சோம்பலே சோறு இன்மைக்குப் பிதா.
- நடந்தால் நாடெல்லாம் உறவு. படுத்தால் பாயும் பகை.
- பதறாத காரியம் சிதறாது.
- பொய்சொல்லி வாழ்ந்தவனுமில்லை. மெய் சொல்லி கெட்டவனுமில்லை.
- மலையைத் துளைக்க சிற்றுளி போதாதா?
- முன்வைத்த காலை பின் வைக்கலாமா? முன்னவனே முன் நின்றால் முடியாத பொருள் உளதோ?
- வல்லவனுக்கு புல்லும் ஆயுதம்.
- வாயுள்ள பிள்ளை பிழைக்கும்.
- வாழ்வும் தாழ்வும் சிலகாலமே!



# வாழ்க்கை

என் தாத்தா மைசூர் மகாராஜாவின் அரண்மனையில் பணியாற்றிவர். அவருடைய முக்கிய வேலை ராஜாவுடன் காட்டுக்கு வேட்டையாடச் செல்வது. வேட்டையாடுவதில் என் தாத்தா கில்லாடி. கொடிய காட்டு மிருகங்களைக் கொஞ்சம்கூட பயமில்லாமல், சர்வசாதாரணமாக வேட்டையாடுவார் என்று சொல்வார்கள்.

தாத்தா கும்மிருட்டாக இருக்கும் காட்டுக்குள் வேட்டையாடப் போகிறீர்களே, உங்களுக்குப் பயமாக இருக்காதா? என்று சிறுவனாக இருந்த நான் அவரிடம் ஒருமுறை கேட்டேன்.

அடே பையா... வேட்டைக்குப் போவதே அந்த த்ரில்லுக்காகத்தானே! என்று சிரித்தார் தாத்தா.

ஆமாம். வேட்டைக்குப் போவதென்பது அவருக்கு ஒரு ஜாலியான பொழுதுபோக்காகத்தான் இருந்திருக்கிறது. காடு என்பது பயங்கரமான பிரதேசம். எந்த புதரிலிருந்து எந்தக் காட்டு மிருகம் பாயுமோ... எதுவும் தெரியாது. காட்டுக்குள் வேட்டையாடப் போவது திகிலான விஷயம். என்றாலும் ஏன் வேட்டையாடப் போகிறார்கள்?

எதிர்பாராத விஷயங்களை எதிர்கொள்வதில் மனிதனுக்கு எப்போதும் ஓர் அலாதியான இன்பம். மகாராஜா தன் ஆட்களை அனுப்பி ஒரு புலியையோ, சிங்கத்தையோ பிடித்து வந்து மரத்தில் கட்டி வைக்கச் சொல்லி, அதை அம்பு எய்து கொல்ல முடியும். ஆனால் அதில் என்ன பெரிய சந்தோஷமோ, த்ரில்லோ இருக்கிறது? எதிர்பாராத நேரத்தில், எதிர்பாராத திசையில் இருந்து வரும் தாக்குதல்களை எதிர்கொண்டு வெற்றி பெறுவதில்தானே முழுமையான சந்தோஷமும் திருப்தியும் கிடைக்கும்?

அப்படிப் பார்த்தால் நம் வாழ்க்கையும் ஒரு மாயவேட்டைதானே? எதிர்பாராத நபர்களிடமிருந்து எதிர்பாராத நேரத்தில் சோதனைகள், நெருக்கடிகள் வரும், தாக்குதல்கள் வரும். அதை எதிர்கொள்வதில்தானே சந்தோஷம் இருக்கிறது. ஐயோ... என் ஆருயிர் நண்பன் இப்படி என்னை ஏமாற்றுவான் என்று கனவிலும் நினைக்கவில்லையே! செழிப்பாக ஓடும் என்று நினைத்துத் தொடங்கிய வியாபாரம் இப்படி ஒரேயடியாகப் படுத்துவிட்டதே! என்றெல்லாம் வருத்தப்பட்டு புலம்புவதில் அர்த்தம் இல்லை.

வேட்டைக்குப் போகும் யாரும் இந்த புலி நான் ஏமாந்த நேரம் பார்த்து என்மீது பாய்ந்துவிட்டது. இது நீதியில்லை என்று புலம்பியதுண்டா? வாழ்க்கையை ஒரு வேட்டையாக நினைத்துக் கொள்ளுங்கள். போராட்ட உத்வேகமும் புதிய உற்சாகமம் கிடைக்கும்... ஆனந்த பிரவாகம் எடுக்கும்...!

*- சுவாமி சுகபோதானந்தா*

ப. பவித்ரா, XII



# தலைவனாக நான்

என் பெயர் ப. பவித்ரா. நான் இந்த வருடம் 12-ம் வகுப்பு படிக்கிறேன். இந்த தலைமைத்துவ பயிற்சியை 2012-ல் இருந்து 2015-ம் ஆண்டு வரை பெற்றுக் கொண்டேன். இந்த தலைமைத்துவ பயிற்சியில் குழுக்கள் பிரிக்கப்பட்டு அதில் பிரதம மந்திரி, துணை பிரதம மந்திரி எனப் பிரித்தனர். அதில் என்னை பிரதம மந்திரியாக தெரிந்தெடுத்தனர். இந்த பயிற்சியின் முதல் பங்கேற்பிலேயே எனக்கு தலைவர் வழிகாட்டுபவராக இருக்க வேண்டும் என்ற எண்ணம் தோன்றியது.

இந்தப் பயிற்சியில்தான் நான் **Time Management** பற்றி அறிந்து கொண்டேன். இதன் மூலம் என் படிப்பில் நான் ஒரு சாதனை செய்தேன். இங்கு கற்றுக் கொடுத்ததின்படி என் 10-ம் வகுப்பில் ஒவ்வொரு பாடத்திற்கும் **Time Management** என்ற ஆயுதத்தைப் பயன்படுத்தினேன். அதனால்தான் என்னால் 500க்கு 46 0 மதிப்பெண் எடுக்க முடிந்தது. எனக்குத் தன்னம்பிக்கையைத் தூண்டியது இந்த தலைமைத்துவம்.

நான் சாதிக்க நினைக்கும் மற்றொன்று எனக்கு மருத்துவராக ஆசை. இதே வழிமுறையை 12-ம் வகுப்பில் நான் கடைபிடித்து அதிக மதிப்பெண் பெறுவேன் என்று உறுதியளிக்கின்றேன்.

வருங்காலத்தில் நான் ஒரு சிறந்த மருத்துவராக ஆன பின் சமுதயாத்திற்கு என் குழுவுடன் சேர்ந்து சேவை செய்வேன்.

முடியாது என்பதை முடியும் என உணரவைத்தது இந்த தலைமைத்துவ பயிற்சிதான்.

நாங்கள் இணைந்து ஒரு பெரிய குழுவை ஆரம்பிப்போம் எனவும் உறுதியளிக்கிறேன்.



## வளமான சமுதாயம் செதுக்கும் சிற்பி நான்

**பி. புவனா, XII-A**

நான் சீலோவாம் விடுதியில் 1-ம் வகுப்பு முதல் படித்து வருகிறேன். நான் இந்தத் தலைமைத்துவப் பயிற்சியில் 9-ம் வகுப்பு முதல் கலந்து கொண்டேன். யாருக்கும் கிடைக்காத அரிய வாய்ப்பை நாங்கள் பெற்றுக் கொண்டதை எண்ணி பெருமிதம் கொள்கிறேன். இந்த அரிய வாய்ப்பை கொடுத்த விஷன் குளோபல் எம்பவர்மென்ட் அமைப்புக்கு மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

என்னை சிறந்த தலைவியாக மாற்றியது இந்த தலைமைத்துவ பயிற்சி என்றால் அது மிகையாகாது. தன்னம்பிக்கை, மனதைரியம், விடாமுயற்சி, மனோசுபாவம் மற்றும் பொறுத்துக்கொள்ளும் தன்மை, அன்பு, பொறுமை, தாழ்மை ஆகிய குணநலன்களை கற்றுக்கொள்ள செய்து, தலைமைத்துவ பண்புகளோடு என்னை சிறந்த தலைவியாக உருவாக்கியது.

**நான் இல்லையென்றால்... வேறுயார்?**
**இப்பொழுது இல்லையென்றால்... எப்பொழுது?**
**என்னால் முடியவில்லையென்றால்...**
**யாரால் முடியும்?**

என்ற எண்ணத்தின் அடிப்படையில் என் வாழ்க்கைப் பயணம் அமைந்துள்ளது.

**சிலை தன்னை செதுக்குபவரிடம்,**
**தன்னை ஒப்படைத்தால் - பிறர்**
**வணங்கும் தெய்வங்களாயின.**

**தலைமைத்துவம் என்னும் பண்பில்**
**நான் நடக்கக் கற்றுக்கொண்டதால்**
**பலபேர் போற்றும் சிறந்த தலைவியாய் ஆவேன்.**

விஷன் குளோபல் தலைவர்களை உருவாக்கும் சிற்பிகளாக இருந்து என்னை செதுக்கியது போல் நாங்கள் பல தலைவர்களை செதுக்கும் சிற்பிகள் ஆவோம்.

எனது இலட்சியம் **IAS** மற்றும் **Aironatica¦ Engineer** ஆவது ஆகும். எனது பணியில் நான் சிறந்த தலைவியாகவும், தலைவரை உருவாக்குபவராகவும் செயல்படுவேன் என உறுதியளிக்கிறேன். நன்றி.

## பொது அறிவு ? பதில்கள்

1. ஒருதடவைகூட லோக்சபாவிற்கு செல்லாத இந்திய பிரதமர் யார்? **•திரு. சரண்சிங்**
2. உலக சுற்றுச்சூழல் தினம் எப்போது கடைபிடிக்கப் படுகிறது? **•ஜுன் 5**
3. மனித உடலில் வியர்க்காத பகுதி எது? **•உதடு**
4. ஒரு ஹெக்டேர் என்பது எவ்வளவு ஏக்கர்? **•கிட்டத்தட்ட 2.5 ஏக்கர்**
5. வேர்கடலையின் அறிவியல் பெயர் என்ன? **•அராக்கிஸ் ஹைபோஜியா**
6. பஞ்ச தந்திர கதைகளை எழுதியவர் யார்? **•விஷ்ணு சர்மா**
7. வருடத்தின் ஒரே நாளில் 24 மணித்தில் பகலும் இரவும் சரியாக 12 மணி நேரம் மட்டும் வருவது எந்த நாளில்? **•மார்ச் 21**
8. மனித தலையில் உள்ள மொத்த எலும்புகள் எத்தனை? **•22**
9. தமிழில் வெளிவந்த முதல் வரலாற்று நூல் எது? **•மோகனாங்கி**
10. பாலில் உள்ளதைவிட அதிக கால்சியம் உள்ள காய் எது? **•வெங்காயம்**
11. ஈக்களின் சுவை உணர் உறுப்பு எது? **•நாக்கு**
12. கவிஞர் கண்ணதாசன் பாடல் எழுதிய கடைசி திரைப்படம் எது? **•மூன்றாம் பிறை**
13. தமிழில் முதல் நாவல் எழுதியவர் யார்? **•தமிழில் முதல் நாவலை எழுதியவர் மாயூரம் வேதநாயகம் பிள்ளை. அவர் 1879-ல் எழுதிய பிரதாப முதலியார் சரித்திரம் தான் தமிழில் முதல் உரைநடை வடிவ நாவல்.**
14. நமது இந்திய நேரம் எந்த இடத்தினை அடிப்படையாய் வைத்து கணிக்கப்படுகிறது? **•அலகாபாத்**

இரு மாதத்திற்கு ஒருமுறை வரும்



# வணங்குகிறோம் ஐயா!

உன்னைப் போல் தலைவனாவோம்

மக்கள் மனதினில் வாழ்வோம்

உயர்வோம்...

எம் சமுதாயம் உயர்ந்திட

திடமுடனும்,

அறிவியல் சிந்தனையுடனும்,

தீர்க்கத்துடனும்

உழைத்திடுவோம்...

**தலைமைத்துவ பயிற்சி**
**மாணவ, மாணவியர்கள்**
சீலோவாம், திருக்கோவிலூர்

# கனவு


இளையோர் தலைமைத்துவம் வளர்த்தெடுப்பதற்கான செய்தி மடல்

செப்டம்பர் 2015

1

# தலைவனாகு

**எஸ். டெய்சி டயானா**



உன்னுள் தலைமைத்துவம் இருக்கிறது!
அதை உலகிற்கு காட்டு!

உனக்கான கனவுகள நிறைவேறும் வரை
முயற்சி செய்!

காலங்கள் மாறலாம்!
ஆனால்,
கடந்த காலங்கள் மாறாது!

கஷ்டம் என்பது தடையாக வந்தாலும்,
அது ஒருநாள் வெற்றியாக மாறவேண்டும்!

பாதை மாறினாலும்
பயணங்கள் தொடரும்
தலைமைத்துவம் இருந்தால்.

உனக்குள் இருக்கும் தலைமைத்துவ
பண்பை உணர்ந்து!

உலகத்திற்கு சிறந்த தலைவனாய்
மாற நீ விரும்பு!

தலைவனாக நீ தன்னம்பிக்கையோடு இரு!

நம்பிக்கை இல்லையென்றாலும்
நம்பி – கை – வை!

வெற்றி பெறவாய் சிறந்த தலைவனாய்...!

**To change the World,**
**Lead the World!**